" கண்ணைக் காப்பது இமை "
" மண்ணைக் காப்பது மழை "

## மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2008ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28-ம் நாள் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

-------------

**திருக்குறள் :** “ ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து”

**பொருள் :** ஒரு பிறவியில் ஒருவன் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கி வாழக் கற்றுக் கொண்டால் அந்த அடக்கம் அவன் எடுக்கும் ஏழு பிறவிக்கும் பாதுகாவலாக வந்து அமையும்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(செய்தி மற்றும் சுற்றுலாத்துறை அரசாணை (நிலை) எண்.245 நாள் 13.11.98)

## 1) சி.டபிள்யு.2 / 39182 / 2006

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்-I விதி 19(2)ன் படி 18.08.2008ம் தேதி நடைபெற்ற கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :** கல்விக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்ற தீர்மானம் எண் .498**
**பதிவு செய்யப்பட்டது.**

## 2) மபொ6 / மஎ 1090 / 07-08

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலம் அலுவலகம் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.24.90/- லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு பொறியாளர் தொழில்நுட்ப ஒப்புதலும், ஆணையாளர் அவர்களின் நிர்வாக ஒப்புதல் பெறப்படும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு டெண்டர்கள் வரவழைக்கப்பட்டதில், இரண்டு சீலிட்ட டெண்டர்கள் வரப்பட்டு, அதில் திரு.எஸ்.நெடுமாறன் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டை காட்டிலும் 4.93% கூடுதலாக கொடுக்கப்பட்ட டெண்டரை ஏற்றுக்கொண்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .499**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 3) மபொ 3 / EST No.345 / 07-08

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு வடக்கு மண்டலம் வார்டில் பாரதிதாசன் தெரு, இந்திரா நகர் மெயின் 4,2,3 குறுக்கு தெருக்களில் தார் சாலை அமைத்தல் வேலை செய்ய ரூ.24,90,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு செயற்பொறியாளர் அவர்களின் தொழில் ஒப்புதலும் பெற்று டெண்டர்கள் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் வரப்பெற்றதில் L1 டெண்டர்தாரரான M/s.P.L.M கன்ஸ்ட்ரக்ஷன் (4/635, Near Arch K.K.நகர், மதுரை -2) நிறுவனத்தின் மதிப்பீட்டு விலையைவிட 5.08% above கொடுத்துள்ள LI டெண்டர்தாரரிடம் விலை குறைப்பு கோரியதில் L1 டெண்டர்தாரர் விலை குறைப்பு தர இயலாது என தெரிவித்ததின் பேரில் L2 டெண்டர்தாரர் M/s.மேக் கன்ஸ்ட்ரக்ஷன் (470 First Cross Street, K.K.Nagar, Madurai-20) நிறுவனத்தின் கொடுத்துள்ள விலை குறைப்பு கடிதத்தில் மதிப்பீட்டு விலையைவிட 4.95% above கொடுக்க சம்மதித்த சம்மத கடிதத்தின்பேரில் அன்னாரது டெண்டரை ஏற்று மேற்கண்ட மதிப்பீடு T UFIDFSL நிறுவனத்தாரின் ஒப்புதல் பெறப்பட்ட நிலையில் மேற்படி வேலையை பொது நிதியின்கீழ் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டும் விலை குறைப்பு சம்மந்த கடிதத்தை ஏற்பு செய்து மதிப்பாய்வுக்குழு கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டும், மபொ3/Est.No.348/07-08 கோப்பில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டதை மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .500**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 4) மதி 1 / 23011 / 08

மதுரை தெற்கு வட்டம், கிழக்கு மதுரை கிராமம் நகர நில அளவை எண்.1974/2-ல் வீடு கட்டி குடியிருப்பவர்களுக்கு சிறப்புத் திட்டத்தின்கீழ் வீட்டடிமனை பட்டா வழங்க மாநகராட்சியின் ஆட்சேபணையில்லா தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு கோரிய மதுரை வருவாய் கேட்டாட்ச்சியரின் ந.க.எண் .5250/08/சி, நாள் : 08/07/2008 வாசிக்கப்பட்டு மேற்படி இடம் சர்வே வார்டு 1 பிளாக் எண்.98, கிழக்கு மதுரை கிராமம் புல எண். 1974/2-ல் கட்டுப்பட்ட 2.10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலம் சர்வே ஆவணங்களில் இனாம் தாரர் இஸ்தியாக்ஷா சாகிப் சத்குரு என இருந்ததை மாவட்ட வருவாய் அலுவலரின் நடவடிக்கைகள் ஆணை ந.க.எண், ஜே2/54832/2006/ நாள்: 21.04.2008-ன் பிரகாரம் டவுன் சைட் புறம்போக்கு (கட்டிடங்கள்) என திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் 40 வருடங்களாக குடியிருந்து வரும் 128 நபர்களுக்கு அரசாணையின்படி வீட்டுமனைப்பட்டா வழங்க மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபணை இல்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .501**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 5) மதி 1 / 7864 / 08

மதுரை மாநகராட்சி தல்லாகுளம் கிராமம், சர்வே எண் 54/1-ல் சுமார் 75 சென்டில் உள்ள நஞ்சை மனையிடத்தில் திரு.கே.எம்.சோணைமுத்து ஆசாரி மற்றும் 24 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து 30 ஆண்டுகளாக குடியிருந்து வருவதால் இலவசமாக வீட்டு மனை பட்டா வழங்க மாநகராட்சி கருத்துரை வழங்கும்படி கோரிய மதுரை வடக்கு வட்டாட்ச்சிரியர் ந.க.எண்.21821/07 பி3, நாள் :25.02.2008-ந்தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு இடம் ஆய்வு செய்யப்பட்டதில் மேற்படி இடம் சர்வே வார்டு எண் XVI பிளாக் எண் .6 T.S.No.23/1 மற்றும் 23/2ல் கட்டுப்பட்ட அரசு புறம்போக்கு மற்றும் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமானதாகும். மேற்படி சர்வே எண் 23/1 (54/1)ல் கட்டுப்பட்ட அரசு புறம்போக்கு (மயானம்) நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு பட்டா வழங்க மாநகராட்சிக்கு ஆட்சேபணை இல்லையென தெரிவிக்கவும். சர்வே எண். 23/2 (54/2)ல் கட்டுப்பட்ட நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு நெடுஞ்சாலைத்துறையில் தடையில்லாச்சான்று பெற்றுக்கொள்ள வேண்டியது என தெரிவிக்கவும். மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .502**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 6) மதி 1 / 26169 / 08

மதுரை வடக்கு வட்டம் தல்லாகுளம் கிராமம் சர்வே எண் 241/2ல் 0.50.0 ஹெக்டர் நிலம் மகளிர் பயிற்சி மையம் அமைப்பதற்கு மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக மதுரை மாநகராட்சி மாமன்றத்தீர்மானம் அனுப்பி வைக்குமாறு கோரிய மதுரை வடக்கு வட்டாட்சிரியர் அவர்களது ந.க.எண் அ3/23208/03, நாள்:23.6.2008-ந்தேதிய கடிதம் வாசிக்கப்பட்டு இடம் ஆய்வு செய்யப்பட்டதில் பிரஸ்தாப இடம் சர்வே வார்டு எண் XV பிளாக் எண்.6 T.S.No.109ல் கட்டுபட்ட அரசு புறம்போக்கு ஊரணியாகும். மேற்படி இடத்தில் மகளிர் பயிற்சி மையம் அமைக்க மாவட்ட நிர்வாகத்தால் முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி முகமைக்கு நிலஉரிமை மாற்றம் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபணை ஏதும் இல்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .503**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 7) மதி 1 / 26919 / 08

மதுரை மாநகராட்சி கோச்சடை கிராமம் சர்வே எண் 17 மற்றும் 18ல் உள்ள விஸ்தீரணம் 43401.51சதுரஅடி பரப்பளவுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் அலுவலக கட்டிடம் கட்ட தானமாக வழங்குமாறு நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் மதுரை அவர்களின் கடிதம் நகல் எண்.2403/2008 அ1 நாள் :24.7.2003ல் கோரப்பட்டுள்ளது.

மேற்படி இடம் கோச்சடை கிராமம் சர்வே எண் 17 மற்றும் 18ல் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடமாகும். மேற்படி இடத்தில் வீஸ்தீரணம் 43401.51சதுரஅடி பரப்பளவுள்ள நிலத்தினை நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு தானமாக அரசின் ஒப்புதலைப்பெற்று வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரப்பட்டதில் மாமன்றம் தனது தீர்மானம் எண் 487 நாள் : 30.7.2008ல் மேற்படி இடம் மாநகராட்சிக்கு பிற்காலத்தில் தேவைப்படும் என அனைத்துக்கட்சி மாமன்ற தலைவர்கள் கருத்து தெரிவித்திருப்பதால் இந்த இடத்தை மீண்டும் நேராய்வு செய்து நன்கு பரிசீலனை செய்து மீண்டும் மாமன்றக்கூட்டத்திற்கு வைக்கவேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியதன்பேரில் இடம் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டதில் கோச்சடை கிராமம் சர்வே எண் 17 மற்றும் 18ல் கட்டுபட்ட மாநகராட்சிக்கு சொந்தமான 28.93 ஏக்கர் நிலத்தில் கிழக்கு கடைசியில் 1 ஏக்கர் நிலத்தை மட்டும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகக் கட்டிடம் கட்ட தானமாக வழங்குவதற்கு அரசின் ஒப்புதலை கோரும் பிரஸ்தாப துறையை சார்ந்த மதிச்சியத்தில் உள்ள கட்டிடத்தில் இம்மாநகராட்சி சமுதாயக்கூடமாக பயன்படுத்தி வருகிறது. அதற்கு பதிலாக மேலே கண்டுள்ள கோச்சடை நிலத்தில் உள்ள 1 ஏக்கர் நிலத்தை மண்டல நிர்வாக இயக்குநர் அலுவலக கட்ட அரசின் ஒப்புதலைப் பெற்று தானமாக வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .504**

**60 சென்ட் இடம் மட்டும் அரசின் ஒப்புதலைப்பெற்று தானமாக வழங்க தீர்மானிக்கிறது.**

## 8) மபொ 3/ 15049/ 08

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு நீரேற்று நிலைய கண்காணிப்பாளருக்கு தற்போது கையிருப்பு தொகை இல்லாததால் சிறு சிறு வேலைகளை உடன் முடிக்க காலதாமதம் ஆவதால், அவசர அத்தியாவசியத்தை முன்னிட்டு பொருட்கள் வாங்க மற்றும் சிறு பழுதுகள் சரி செய்ய மேலக்கால் குடிநீரேற்று நிலையம், அரசரடி குடிநீரேற்று நிலையம், தச்சம்பத்து குடிநீரேற்று நிலையம், மணலூர் குடிநீரேற்று நிலையம், பூஸ்டர் குடிநீரேற்று நிலையம், ஆகிய ஐந்து குடிநீரேற்று நிலையம் பராமரிப்பு பணிக்காக (W.W.I/c) குடிநீரேற்று நிலைய கண்காணிப்பாளர் (பொறுப்பு) திரு.ஜீ.சூசை ஆரோக்கியசாமி பெயரில் ரூ.5000/- கையிருப்பு தொகை வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .505**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது,**

## 9) மபொ 2/ மஎண் 1294/ 08-09

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு கிழக்கு மண்டலம் வார்டு 44ல் உள்ள சிங்காரத்தோப்பு நடுநிலைப்பள்ளியில் தரைதள பள்ளி கட்டிடம் அமைக்க 2008-2009 ஆம் ஆண்டு விலை விகதப்படி ரூ.20 லட்சத்துக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு செயற்பொறியாளரின் தொழில்நுட்ப ஒப்புதலுடன் ஆணையாளர் அவர்களின் நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டுள்ளன. மேற்கண்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்காக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .506**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது,**

**10) மபொ 7/ 26965/ 08**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்.71 மாப்பிளை விநாயகர் தியேட்டர் மேற்கு பக்கம் உள்ள சாலை (ராஜீவ்காந்தி) சாலை நுழைவு வாயிலின் மையப்பகுதியில் தூங்கு மூஞ்சி வாகை மரம் ஒன்று அமைந்துள்ளது. இம்மரம் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மேலும் இம்மரம் இருப்பதால் அருகில் ஆக்கிரமிப்புகள் ஏற்படுகிறது. எனவே இந்த மரத்தை அகற்றி போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவும் அருகில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமல் பாதுகாக்கவும் மேற்கண்ட மரத்தை அகற்ற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .507**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**11) கிமபொ 3/ 13386/ 08**

மதுரை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு 51ல் மாரியம்மன் தெப்பக்குளம் அருகில் அமைந்துள்ள மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு சொந்தமான ஆதரவற்ற குழந்தைகளின் இல்லத்தில் (கருணை இல்லம்) குடிநீர் குழாய் இல்லாமல் மிகவும் சிரமமான சூழ்நிலையில் உள்ளதால் மேற்கண்ட ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்திற்கு மாநகராட்சியின் மூலம் இலவச குடிநீர் குழாய் இணைப்பு ஒன்று வழங்கக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .508**

**மதுரை மாநகராட்சி தண்ணீர் விநியோகம் துணை விதிகளில் கோவில்கள், பள்ளிவாசல்கள், மாதா கோவில்கள் இவைகளுக்கு மட்டும் இலவச குடிநீர் குழாய் இணைப்பு வழங்க வகை செய்யப்பட்டுள்ளதால், பொருளில் குறிப்பிட்டுள்ள இனத்திற்கு இலவச குடிநீர் குழாய் இணைப்பு வழங்க இயலாது என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**12) மபொ2/மஎண்** 1293/08/09

மதுரை மாநகராட்சி மைய பொறியியல் பிரிவு கிழக்கு மண்டலம் வார்டு 46, பந்தடி 1வது தெருவில் இருக்கும் மாநகராட்சி திருவள்ளுவர் உயர்நிலை பள்ளியில் வகுப்பறை கூடுதல் கட்டிடம் கட்டும் வேலைக்கு 2008-09 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூ.20 இலட்சத்துக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு செயற்பொறியாளரின் தொழில்நுட்ப ஒப்புதலுடன் ஆணையாளர் அவர்களின் நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டுள்ளன. மேற்கண்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்காக மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .509**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**13) Jn.S6**/26327/06

மதுரை மாநகராட்சி ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நீர் ஆதாரங்களை மேம்படுத்தும் திட்டத்திற்கு திட்ட அறிக்கை தயாரிக்க டெண்டர் வரவழைக்கப்பட்டு அதில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள M/s.Community Consulting India (P) Ltd. நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மானம் எண்.357/dt: 31.01.2007ல் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி நிறுவனம் உரிய காலத்தில் பணியை செய்ய தவறியதால் அன்னாரின் வேலை உத்தரவை ரத்து செய்து மறு டெண்டர் வரவழைக்கப்பட்டது. அதில் ஆலோசகர் நியமனம் செய்வதற்கு டெண்டர் கோரியதில் குறைந்த விலைவிகிதம் கொடுத்துள்ள M/s.Pushes, வேலூர் நிறுவனத்திற்கு ரூ.77,50,000க்குரிய ஒப்பந்தப்புள்ளியை 30.03.2007ல் நடைபெற்ற மதிப்பாய்வுக்குழுக் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டு வணக்கத்திற்குரிய மேயர் முன் ஒப்புதல் பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டதை மாமன்றத்தின் ஒப்புதல் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .510**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**14) B 30**/02095/08

மதுரை மாநகராட்சி எல்லைக்குள் சேரும் குப்பைகளை அள்ளுவதற்கு லாரி நிலையத்தில் உள்ள வாகனங்களுக்கு ஓட்டுநர்கள் போதுமான அளவில் மாநகராட்சியில் இல்லை என்பதால் மதுரை மாநகராட்சி வார்டுகளில் குப்பைகளை சேகரிக்கும் பணிகளை மேற்கொள்ளவும், குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பிற்கான கனரக வாகனங்கள் ஓட்டுவதற்கு தேவையான ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் சப்ளை பெறுவதற்கு ரூ.23,16,600 (இருபத்தி மூன்று இலட்சத்து பதினாயிரத்து அறுநூறு மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மதிப்பீடு ஒப்புதலுக்கும், ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கலாம் என்பதற்கு வ.உ.மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று அதன்பேரில் ஒப்பந்த அடிப்படையில் 52 கனரக

வாகன ஓட்டுநர்கள் சப்ளை செய்ய உரிய நாளிதழில் விளம்பரம் வெளியிட்டும், இணைய தளத்தில் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிட்டும் ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்பம் சான்று மதிப்பாய்வு குழுவில் சரிபார்க்கப்பட்டு விலைப்புள்ளி கவர் (B கவர்) திறக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. விலைப்புள்ளி கவர் திறக்கப்பட்டு விலைப்புள்ளி பரிசீலனை செய்ததில் குறைந்த விலைப்புள்ளி LI ஒப்பந்தக்காரர் M/s. கிளின் கேர் சர்வீஸ் சென்டர் எண் 23 C/6, பெசன்ட் ரோடு சின்ன சொக்கிக்குளம், (மதுரை.625 002) நிறுவனத்தார் 2007-08 ஆம் ஆண்டு மதிப்பீடு விலை விகிதத்திற்கு 2.36% குறைவாக நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.145 க்கு சப்ளை செய்ய விலைப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்றுக்கொள்ளவும் அன்னாருக்கு சப்ளை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .511</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## <u>15) B 30/26415/08</u>

மதுரை மாநகராட்சி பள்ளிக்கூடங்கள் சுற்றுச்சூழல் பூங்கா, வெள்ளக்கல் குப்பை மையம் மற்றும் அலுவலக கட்டிடங்களுக்கு தேவையான காவலர்களை ஒப்பந்த அடிப்படையில் 71 நபர்களை (மஸ்தூர் கிரேடு II) பொதுப்பணித்துறையில் 2008-2009 ஆம் ஆண்டு விலை விகிதப்படி 10 மாதங்களுக்கு மட்டும் சப்ளை பெற மதிப்பீடு ரூ.23,70,000 (ரூபாய் இருபத்தி மூன்று இலட்சத்து ஏழுபதாயிரம் மட்டும்) க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு ஒப்புதலுக்கும், ஒப்பந்த அடிப்படையில் காவலர்களை சப்ளை பெற டெண்டர் வரவழைக்கலாம் என்பதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு

**<u>மாமன்ற தீர்மானம் எண் .512</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## <u>16) B 30/26967/08</u>

மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி வார்டுகளில் சேரும் குப்பைகளை அள்ளும் பணிக்கு தேவையான 50 டிப்பர் ஆட்டோக்களை M/s.சுசீ ஆட்டோ சேல்ஸ் & சர்வீஸ் (பி) லிமிடெட் நிறுவனத்திடமிருந்து சப்ளை பெறப்பட்டுள்ளது. தற்போது மேற்காணும் 50 ஆட்டோக்களுக்கும் முதல் வருட சர்வீஸ் காலம் முடிவடைந்துவிட்ட நிலையில் வாகனங்களுக்கு தொடர்ந்து உபயோகத்திற்கு முறையான "கம்பெனி ஒர்க்ஷாப்" பராமரிப்பு மிகவும் அவசியம் என்பதால் M/s.சுசீ ஆட்டோ சேல்ஸ் & சர்வீஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தாரின் 24.07.08 ம் தேதிய கடிதத்தில் 50 டிப்பர் ஆட்டோக்கள் பராமரிப்பு பணிகள் செய்து தர கீழ்காணும் விலைப்புள்ளி தந்துள்ளனர்.

| **வ.எண்** | **வருடம்** | **50 டிப்பர் ஆட்டோகளுக்கான பராமரிப்பு தொகை (ரூபாயில்)** |
|---|---|---|
| 1 | 01.09.2008 முதல் 31.08.2009 முடிய | 5,40,000.00 |
| 2 | 01.09.2009 முதல் 31.08.2010 முடிய | 6,21,000.00 |
| 3 | 01.09.2010 முதல் 31.08.2011 முடிய | 7,15,150.00 |
| 4 | 01.09.2011 முதல் 31.08.2012 முடிய | 8,21,272.00 |

ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் அவ்வருடத்திற்கான ஒப்பந்த விலைப்புள்ளியின் பிரகாரம் அனைத்து ஆட்டோ வாகனங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி தொகையில் 50 சதவீதத்தை அவ்வாண்டின் ஆரம்பத்தில் வரும் முதல் வாரத்திலும் மீதம் உள்ள 50 சதவீத தொகையினை அதன் 7வது மாதத்தின் முதல் வாரத்திலும் செலுத்திட வேண்டுமாறும், வாகனங்களில் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளும்போது பயன்படுத்தப்படும் உதிரி பாகங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்கு உட்படாத பராமரிப்பு வேலைகளுக்கு உண்டான பில் தொகையை அதற்கு அடுத்த மாத முதல் வாரத்தில் செலுத்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட M/s.சுசீ ஆட்டோ சேல்ஸ் & சர்வீஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று வருடாந்திர பராமரிப்பிற்கு ஒப்பந்தம் செய்துக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .513</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**17) <u>ம.தி.1/05775/08</u>**

மதுரை மாநகராட்சி வார்டு எண்-9, சர்வே வார்டு எண்.X பிளாக் எண்.79 T.S.No.277ல் கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான ஒரு ஏக்கர் 31 செண்ட் மொத்த நிலத்தில் கிழக்கு பகுதியில் அரசு ராஜாஜி மருத்துவமனை விரிவாக்க கட்டிடத்திற்கு வழங்கியதுபோக மேற்கு பகுதியில் மீதமுள்ள 43 செண்ட் பரப்பளவுள்ள இடம் காலியாக உள்ளதால் தேவையில்லாத ஆக்கிரமிப்புகள் ஏற்படுகிறது. மேற்கண்ட இடத்தில் வடக்கு மண்டல அலுவலக கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் 43 செண்ட் பரப்பளவுள்ள இடத்தை வடக்கு மண்டல அலுவலகக் கட்டிடம் கட்ட ஒதுக்கீடு செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் மானியம் பெற்று அலுவலகம் கட்டி முடிக்க மாமன்றத்தின் முடிவினைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .514</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**18) <u>RRI/ 28219/ 05</u>**

மதுரை மாநகராட்சி உள்வட்ட சுற்றுச்சாலை சாலையில் ஒப்பந்த அடிப்படையில் தமிழ்நாடு முன்னாள் படை வீரர் கழகத்தை சார்ந்த (தமிழக அரசு அதிகாரம் பெற்ற) 46 பணியாளர்கள் கீழ்கண்டவாறு பணிபுரிகிறார்கள்.

| சுங்கச்சாவடி எண் | உதவி பாதுகாவல் அலுவலர் | தலைமை பாதுகாவலர் |
|---|---|---|
| **1** | **1** | **9** |
| **2** | **1** | **6** |
| **3** | **1** | **6** |
| **4** | **1** | **6** |
| **5** | **1** | **9** |
| **கப்பலூர் பாலம்** | **-** | **5** |
| | **5** | **41** |

அரசு பொது (முன்னாள் படைவீரர்கள்) துறை அரசாணை எண் 1740 நாள் : 5.11.2007ல் 1.10.2007 முதல் உதவி பாதுகாவல் அலுவலருக்கு ரூ.6854-லிருந்து ரூ.7606-ம் தலைமை பாதுகாவலருக்கு ரூ.5484/- லிருந்து ரூ.6796/–ம் ஊதியம் சேவைக் கட்டணம் மற்றும் சேவை வரிகளுடன் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அரசாணை, ஏட்டில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.) மேற்கண்ட 46 முன்னாள் படைவீரர்களுக்கும் 01.10.2007 முதல் அரசாணையின்படி புதிய ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .515</u>**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**19) <u>ம.நி.1/048161/07</u>**

மதுரை மாநகராட்சி பொது சுகாதார பணிகளில் மகப்பேறு மனைகள் மற்றும் மருந்தகங்களில் காலியாக உள்ள 11 மருத்துவர் அலுவலக பணியிடங்களை நிர்வாக நலன் கருதி நிரப்பிடும் பொருட்டு தமிழ்நாடு மாநகராட்சி பணிவிதிகளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வயது வரம்பு மற்றும் கல்வித்தகுதி அடிப்படையில் 1:5 என்ற விகிதச்சாரத்தில் வகுப்பு வாரி சுழற்சி அடிப்படையிலும் சென்னை தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதியானோர் பட்டியல் கோரப்பட்டு பெறப்பட்ட பட்டியலிருந்து நான்கு நபர்களுக்கு மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 268, நாள் :27.12.2007 மற்றும் 368 நாள்:30.4.2008ன்படி மருத்துவ அலுவலர்களாக பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது. மேற்கண்ட நான்கு நபர்களில் மற்றும் இரண்டு நபர்கள் மருத்துவ அலுவலர்களாக பணியேற்றனர். மீதமுள்ள இரண்டு நபர்களான 1) திரு.சி.சுரேஷ் கண்ணா 2) திரு.டி.ஹெச் உஷா ஆகியோர் இதுவரை பணியேற்கவில்லை. இந்நிலையில் மீதமுள்ள 7 மருத்துவர் அலுவலர் பணியிடங்களை நிரப்பிட மீண்டும் வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து தகுதியானோர் பட்டியல் கோரப்பட்டது. அதன்பேரில் வகுப்புவாரியாக ஆறு மருத்துவ அலுவலர் பணியிடங்களுக்கு 1:5 என்ற விகிதத்தில் 30 நபர்கள் கொண்ட பட்டியல் பெறப்பட்டது. இதில் ஷெடியூல் வகுப்பு முன்னுரிமையற்றோர் (மகளிர் ) ஒரு பிரிவிற்கு மட்டும் ஆள்இன்மை சான்று பெறப்பட்டது.

வேலை வாய்ப்பகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலில் கண்டுள்ள 30 நபர்களை 11.7.2008ல் அன்று சான்றிதழ்கள் சரி பார்த்தலுக்கு அழைக்கப்பட்டதில் கீழ்கண்ட 7 நபர்கள் மட்டுமே ஆஜராகினர்.

| வ.எண் | இனவாரி சுற்று | பெயர் | வேலை வாய்ப்பக பதிவு எண் / நாள் | கல்வித்தகுதி |
|---|---|---|---|---|
| 1 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் முன்னுரிமையற்றோர் | பி.ராஜ்குமார் | 2005 MO 5145/ 27.04.2005 | MBBS |
| 2 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் முன்னுரிமையற்றோர் | கே.எம்.எம்.விஷ்வக்சந்தர் | 2005 MO 5191/ 27.04.2005 | MBBS |
| 3 | பிற்படுத்தப்பட்டோர் / முன்னுரிமையற்றோர் | ஜெ.கிறிஸ்டோபர் | 2003 MO 2466/ 21.02.2003 | MBBS |
| 4 | பொதுச்சுற்று / முன்னுரிமையற்றோர் (மகளிர்) | ஆர்.ராஜபிரியா | 2002 FO 6640/ 14.05.2002 | MBBS |
| 5 | மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் முன்னுரிமையற்றோர் (மகளிர்) | பி.ஜெனிதா | 2004 MO 5651/ 18.5.2004 | MBBS |
| 6 | பொதுச்சுற்று / முன்னுரிமையற்றோர் | எம்.எஸ்.சாஹூபர் சாதிக் | 2003 MO 2936/ 17.3.2003 | MBBS |
| 7 | பிற்படுத்தப்பட்டோர் / முன்னுரிமையற்றோர் | டி.சுப்ரியா | 2003 FO 2391/ 17.3.2003 | MBBS |

மேற்கண்ட பட்டியலில் உள்ள 7 நபர்களில் வரிசை எண் .1 மற்றும் 3 முதல் 7 வரையிலுள்ள மொத்தம் 6 நபர்களும் வகுப்புவாரி சுற்றின் அடிப்படையில், தகுதியான நபர்களாக இருப்பதால் அன்னர்களை முற்றிலும் தற்காலிகமாக ரூ.8000-275-13500 என்ற ஊதிய விகிதத்தில் மருத்துவ அலுவலர்களாக அரசின் உறுதியாக்கத்திற்கு உட்பட்டு பணிநியமனம் செய்யவும்,

மேலே குறிப்பிட்டுள்ளவாறு பணியில் சேராத இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்ட நியமன ஆணையை ரத்து செய்யவும், அவ்வாறு ரத்து செய்யப்படும் பட்சத்தில் ஏற்படும் இரண்டு காலிப்பணியிடங்களுக்கும், ஆள்இன்மைச் சான்றிதழ் பெறப்பட்டதால் ஏற்பட்ட காலிப்பணியிடத்தையும் சேர்த்து ஏற்படும் மொத்தம் மூன்று காலிப்பணியிடங்களுக்கு வேலை வாய்ப்பகத்திலிருந்து தகுதியானோர் பட்டியல் பெறப்பட வேண்டியள்ளது. தற்போது காலிப்பணியிடங்களை நிரப்பிடும் நடவடிக்கையில் அரசாணை எண்.241 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் : 29.10.2007ன்படி கீழ்கண்டவாறு வகுப்பு வாரி சுழற்சி முறை பின்பற்ற வேண்டியுள்ளது.

1) General Turn Priority
2) SC Non-Priority
3) MBC Non – Priority

இதில் வரிசை எண்.3ல் கண்டுள்ள MBC Non-Priority பிரிவிற்கு ஏற்கனவே பெறப்பட்ட வேலை வாய்ப்பக பட்டியலில் இடம் பெற்றுள்ள வரிசை எண்.2ல் கண்டுள்ள திரு.கே.எம்.எம்.விஷ்வக்சந்தர் என்பவர் தகுதியானவராக இருப்பதாலும், மாநகராட்சி நிர்வாக நலன் கருதியும், மருத்துவ அலுவலர் பணியிடத்தின் அவசர அவசியத்தை கருதியும், அவரை மருத்துவ அலுவலராக முற்றிலும் தற்காலிகமாக ரூ8000-275-13500 என்ற ஊதிய விகிதத்தில் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணிநியமனம் செய்யவும், வரிசை எண்.1 General Turn Priority மற்றும் வரிசை எண்,2 SC Non-Priority இனங்களுக்கு வேலை வாய்ப்பகத்திலிருந்து தகுதியானோர் பட்டியல் பெறவும், மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 104(3)(b)ன்படி மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .516</u>**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## <u>20) ம.ந.6/29310/08</u>

இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகை திட்டத்தின்கீழ் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள 65 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களை கண்டறியும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. ஏற்கனவே நடைமுறையில் இருந்த முதியோர் உதவித்தொகை திட்டத்தின்கீழ் 1.1.2008 முதல் 30.6.2008 வரை உதவித்தொகை பெற்று வந்த வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் பட்டியலில் இடம்பெறாத 1320 நபர்களை மேற்படி திட்டத்தின்கீழ் பயன்பெற வறுமைகோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்க்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : பட்டியல் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .517</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும் ஏற்கனவே கணக்கு எடுக்கப்பட்டுள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள நபர்கள் அடங்கிய பட்டியலில், உண்மையான, மிகவும் கஷ்டப்படும், பின்தங்கிய வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை மக்கள் பெயர்கள்</u>**

**விடுபட்டு உள்ளன என்றும், பல வசதி படைத்தவர்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள இந்த பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அனைத்துக்கட்சி மாமன்றத் தலைவர்கள் மாமன்றத்தில் கருத்து தெரிவித்தனர். எனவே மீண்டும், ஒவ்வொரு வார்டு வாரியாக, வீடு வீடாக சென்று வருமான அடிப்படையில் 65 வயதிற்கு மேற்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழ்உள்ள நபர்களை கணக்கெடுத்து, புதிதாக பட்டியல் தயார் செய்து மாமன்ற ஒப்புதல் பெற மாமன்றத்தில் வைக்க வேண்டியது.**

## 21) ம.பொ.5/11235/08

மதுரை மாநராட்சி வார்டு எண் 55ல் சன்னியாசியூரணி பகுதியில் சர்வே வார்டு எண்.1பிளாக் எண் 68 டி.எஸ்.நம்பர் 29 (பழைய டி.எஸ்.எண்.2578 (பாகம்) கட்டுப்பட்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்ட உயர்நிலை தொட்டி, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், தபால் துறை மண்ணெண்ணெய் பங்க் ஆகியவற்றிற்கு வழங்கியதுபோக மையப்பகுதியில் மீதமுள்ள சுமார் 40சென்ட் பரப்பளவுள்ள இடம் காலியாக உள்ளதால் தேவையில்லாத ஆக்கிரமிப்புகள் ஏற்படுகிறது. மேற்கண்ட இடத்தில் கிழக்கு மண்டல அலுவலக கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் 40 சென்ட் பரப்பளவுள்ள இடத்தை கிழக்கு மண்டல அலுவலக கட்டிடம் கட்ட ஒதுக்கீடு செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி நிர்வாக ஆணையரிடம் மானியம் பெற்று அலுவலகம் கட்டி முடிக்க மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .518**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 22) ம.பொ.7/ம.எண் 1010/08

மதுரை மாநராட்சி மேற்கு மண்டலம் வார்டு 22 முதல் 30 வரை மற்றும் வார்டு எண் 66 முதல் 72 வரை கொண்டுள்ளது. இவ்வார்டுகளுக்கென மண்டல அலுவலகம் தற்போது T.B சாலையில் அமைந்துள்ளது. மேலும் இவ்வலுவலக கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே புதிய கட்டிடம் அமைப்பது மிகுந்த அவசியமாக உள்ளது.

தற்பொழுது வார்டு எண்.27ல் அரசரடி நீரேற்று நிலைய பின்புறம் காலியாக உள்ள மாநகராட்சி இடத்தில் புதிய கட்டிட அலுவலகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென உத்தேச செலவினம் ரூ.75.00 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தொகைக்கென அரசின் நிதியுதவி பெற்று மேற்கண்ட அலுவலக கட்டிடம் அமைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .519**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 23) ம.பொ.4/09335/2008

மதுரை மாநராட்சி, வடக்கு மண்டலம் வார்டு எண். 1 முதல் 21 வரை கொண்டுள்ளது. இவ்வார்டுகளுக்கென மண்டல அலுவலகம் தற்பொழுது அறிஞர் அண்ணா மாளிகையில் செயல்பட்டு வருகிறது. எனவே வடக்கு மண்டலத்திற்கென தனியாக வார்டு எண்.10ல் பனங்கல் சாலையில் ஏற்கனவே அரசு மருத்துவமனை விரிவாக்க கட்டிடப் பணி நடைபெறும் இடத்தின் மேற்புறம் காலியாக உள்ள இடத்தில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கென உத்தேச செலவினம் ரூ.75.00 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத் தொகையினை அரசின் நிதியுதவி பெற்று மேற்கண்ட அலுவலக கட்டிடம் அமைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .520**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 24) ந.பொ.1/19479/2008

மதுரை மாநராட்சி, கிழக்கு மண்டலம் வார்டு எண்.44 முதல் 59 வரை கொண்டுள்ளது. இவ்வார்டுகளுக்கென மண்டல அலுவலகம் தற்பொழுது சேர்மன் முத்துராமய்யர் சாலையில் செயல்பட்டு வருகிறது. இக்கட்டிடம் தற்பொழுது போதுமான வசதி இல்லாததால் வார்டு எண்.55ல் புது இராமநாதபுரம் சாலையில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சன்னாசி ஊரணி காலியிடத்தில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கென உத்தேச செலவினம் ரூ.75.00 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தொகையினை அரசின் நிதியுதவி பெற்று மேற்கண்ட அலுவலக கட்டிடம் அமைக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .521**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**25) ம.பொ.4/ம.எண் 739/07-08**

மதுரை மாநராட்சி மையப்பொறியியல் பிரிவு வார்டு எண் 3ல் அமைந்துள்ள கோசாகுளம் கண்மாயை சுற்றிலும் Stone Pitching அமைக்கும் வேலைக்கு 2007 – 2008 ஆம் ஆண்டு விலை விகிதத்திற்கு ரூ.25,00,000/-க்கு (ரூபாய் இருபத்தி ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மேற்கண்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதலுக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று டெண்டர் வரவழைக்கப்பட்டதில் டெண்டர்கள் ஏதும் வரப்பெறாததால் 2008 – 2009 ஆம் விலை விகிதத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு டெண்டர் வரவழைக்கப்பட்டதில் இரண்டு சீலிட்ட டெண்டர்கள் வரப்பட்டன. அதில் G.அறிவழகன் 42A, வசந்த நகர் 1வது தெரு, மதுரை -3 என்ற ஒப்பந்ததாரரின் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 0.11% குறைவாக கொடுத்துள்ளதை மதிப்பாய்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட டெண்டரை ஏற்பு செய்து கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது. வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. எனவே முன் ஒப்புதல் பெற்று வழங்கப்பட்ட மதிப்பீடு நிர்வாக ஒப்புதல் மற்றும் வேலை துவக்கம் உத்தரவிற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .522**

**இந்த வேலைக்கு வேறொரு ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வார்டு மாமன்ற உறுப்பினர் தெரிவித்திருப்பதால், இதனை சரிபார்த்து, அடுத்த மாமன்ற கூட்டத்தில் பொருள் வைக்க தீர்மானிக்கிறது.**

**26) கி.ம.பொ/11236/08**

மதுரை மாநராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 55. பழைய குயவர் பாளையம் சாலையில் பி.பி. ரோடு சந்திப்பு ஆறுநாடு கல்யாண மஉறால் அருகில் உள்ள மாநகராட்சி காலியிடத்தில் மாநகராட்சி வருவாயினை கருதி (10”x10”) அளவில் ஐந்து கடைகள் சுமார் ரூ.5.00 இலட்சத்தில் மாநகராட்சி நிதியிலிருந்து கட்ட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .523**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**27) ந.பொ1/19479/08**

மதுரை மாநராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண் 31ல் அமைந்துள்ள பெரியார் பேருந்து நிலையம் தற்போது எல்லீஸ் நகர் மேம்பாலம் கட்டப்பட்டு திறக்கப்பட்டதால் அதிக அளவில் வாகன நெருக்கடி ஏற்பட்டு பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது. எனவே பெரியார் பேருந்து நிலையத்தையும் திருவள்ளுவர் பேருந்து நிலையத்தையும் ஒருங்கிணைத்து நவீன பெரியார் பேருந்து நிலையத்தினை அபிவிருத்தி செய்ய ரூ.2.00 கோடி செலவில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதை ஒப்புதலுக்கும் மேற்படி தொகையை தமிழ்நாடு அரசிடமிருந்து கடனாக பெற்று மேற்கண்ட பணியினை நிறைவேற்றிட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .524**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : 28.08.2008

* . * . * . * . * . *

**கண்ணைக் காப்பது இமை"**
**"மண்ணைக் காப்பது மழை"**

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2008**ம் ஆண்டு ஜீலை திங்கள் **28-ம்** நாள் **வியாழக்கிழமை** காலை **12.30** மணிக்கு

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

1) **<u>மவ3 /29658 / 2008</u>**

மதுரை மாநகராட்சி – கரிமேடு மீன் மார்க்கெட்டில் அரசு சார்பு நிறுவனமான தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் சார்பாக இரண்டு பெட்டிக்கடைகள் மட்டும் மீன் மார்க்கெட்டின் மோட்டார் ரூம் அருகில் மேல்புறம் காலியாக உள்ள இடத்தில் 8x8 என்ற அளவில் ஒரு பெட்டிக்கடை ஒன்றுக்கு மாதாந்திர உரிமம் கட்டணம் ரூ.700/-வீதம் நிர்ணயம் செய்து இரண்டு பெட்டிக்கடைகள் அமைத்துக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .525</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. .</u>**

2) **<u>தெ.ம.பொ3/ 015939 /2008</u>**

நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான வார்டு எண்.32 திருப்பரங்குன்றம் சாலை மேம்பாலம் சந்திக்கும் இடத்தில் உள்ள கட்டண கழிப்பறை காவல்துறை மற்றும் நெடுஞ்சாலை துறையினரால் போக்குவரத்திற்கு இடையூறாகவும் அடிக்கடி விபத்துகள் நடைபெறுவதாலும் மேற்கண்ட கழிப்பறையை இடித்து அகற்றுமாறு பல்வேறு ஆய்வுக்கூட்டத்தில் தெரிவிப்பதிற்கினங்க மேற்கண்ட கழிப்பறையை இடித்தும் 1.4.2008 முதல் வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தை இரத்து செய்து அப்புறப்படுத்தி பொது மக்களுக்கு நடைபாதை வசதி செய்து கொடுக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .526</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது..</u>**

3) **<u>ம.பொ.7 /ம.எண் 409 /07-08</u>**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 26ல் அமைந்துள்ள ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தில் Bus Bay அமைக்க ரூ.25.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் L1 ஒப்பந்ததாரர் திரு.P.பாண்டி அவர்கள் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 4.95% கூடுதலாக கொடுத்துள்ளார். அன்னார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .527</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

4) **<u>ம.பொ.7/ம.எண்.475/07-08</u>**

மதுரை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 26ல் அமைந்துள்ள ஆரப்பாளையம் பேருந்து நிலையத்தின் தெற்கு பக்கம் கடைகள் அமைக்க ரூ.12.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் L1 ஒப்பந்ததாரர் திரு.P.பாண்டி அவர்கள் மதிப்பீடு விலை விகிதத்திற்கு 4.95% கூடுதலாக கொடுத்துள்ளார். அன்னார் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக்கொண்டு மேற்கண்ட பணிக்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்ற தீர்மானம் எண் .528</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. .</u>**

5) **ம.தி1/18356/08**

மதுரை மாநகராட்சி வார்டு -28 மேற்கு மதுரை கிராமம் சர்வே வார்டு எண். 5 பிளாக் எண்-20 நகர நில புல எண்.62 (பழைய நகர புல எண் 1617/3B(P)ல் விஸ்தீரணம், ஏக்கர் 2 செண்ட்42.5ல் உள்ள புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க இம்மாநகராட்சியின் ஆட்சேபணையின்மை சான்றிதழ் கோரி மதுரை தெற்கு வட்டாட்சிரியர் ந.க.எண்.4661/2008/rb3/நாள்:25.02.2008 வாசிக்கப்பட்டு மேற்படி இடம் நகர அளவரால் புலத்தணிக்கை செய்யப்பட்டதில் மேற்படி நிலம் வாய்க்கால் புறம்போக்கு என அறியப்பட்டது. அதன்படி சென்ற 27.06.2008ல் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டத்தில் மேற்படி இடத்தை மீண்டும் ஆய்வு செய்து உரிய குறிப்புடன் மீண்டும் மாமன்றத்தின் முன் வைக்க தீர்மானம் எண் 461ன் மூலம் நிறைவேற்றப்பட்டது. மாமன்ற தீர்மானத்தின்படி மீண்டும் ஸ்தல ஆய்வு சர்வே ஆவணங்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலகம் ஆகியவற்றில் ஆய்வு செய்யப்பட்டது. இம்மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள சர்வே ஆவணங்களில் பிரஸ்தாப சர்வே எண்கள் 25/42/50/1/51/3 மற்றும் 52/2 ஆகிய எண்கள் வாய்க்கால் என உள்ளது. ஆனால் வருவாய்த்துறை மற்றும் கிராம நிர்வாக அலுவலகத்தில் உள்ள ஆவணங்களில் கிராம நத்தம் என பதிவாகியுள்ளது அறியப்பட்டுள்ளது. எனவே அந்நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதில் இம்மாநகராட்சிக்கு ஆட்சேபணை ஏதுமில்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .529**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. .**

6) **மதி**1/42261/08

மதுரை மாநகராட்சி வார்டு எண் -42 சுப்பிரமணியபுரம் அருந்ததியர் காலனி சர்வே வார்டு எண் 4 பிளாக் 39 சர்வே எண் 1946ல் உள்ள 1 ஏக்கர் 22 சென்ட் பரப்பளவுள்ள மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க மாநகராட்சிக்கு ஆட்சேபணையில்லையென மாநகராட்சி தனது மாமன்ற தீர்மான எண் 382 நாள் : 3.04.2008ல் நிறைவேற்றிய தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளின்படி நிலகிரையத் தொகையினை மாநகராட்சிக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினரால் செலுத்தப்பட்டுள்ளதாக குடிசை மாற்று வாரியம் நிர்வாகப்பொறியாளரின் ந.க.எண் 816 உ.பொ.நி 2005 நாள்:28.05.2008ல் தெரிவித்தப்படியால் சுப்பிரமணியபுரம் அரிசன காலனி T.S No.1946 காணும் 1.22 ஏக்கர் நிலம் மாநகராட்சிக்கு சொந்தமான பட்டா நிலம் என்பதால் அரசின் ஒப்புதலைப் பெற்று தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய இம்மாநகராட்சிக்கு ஆட்சேபணையில்லையென தெரிவிக்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .530**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. .**

7) **JNS2/39657/06**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின்கீழ் கீழ்காணும் திட்டத்திற்கு மத்திய மாநில அரசுகள் ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டங்களுக்கு மத்திய அரசு 50% மாநில அரசு 20% மாநகராட்சி 30% பங்குகளுடன் பணி செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசு பங்கு 50% | மாநில அரசு பங்கு 20% | மாநகராட்சி பங்கு 30% |
|---|---|---|---|---|---|
| 1 | வைகை இரண்டாவது குடிநீர் திட்டம் | 59.32 | 29.66 | 11.87 | 17.79 |
| 2 | மழைநீர் வடிகால் திட்டம் | 256.87 | 128.43 | 51.37 | 77.07 |
| 3 | விடுபட்ட பகுதிகளில் பாதாளச்சாக்கடை திட்டம் | 231.07 | 115.54 | 46.21 | 69.33 |
| மொத்தம் | | | | | 164.19 |

மேற்காணும் மூன்று திட்டங்களுக்கும் ஆகும் மாநகராட்சி பங்குத்தொகை ரூ.164.19 கோடியை Tuffisal நிறுவனத்திலிருந்து பெற்று இத்திட்டத்தினை நிறைவேற்ற மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்ற தீர்மானம் எண் .531**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது. .**

(ஓம்...) ஜி. தேன்மொழி
மேயர்
மதுரை மாநகராட்சி

**மதுரை**
**நாள் : 28.08.2008**

* * * * * *